**ஏப்ரல் – 28**


# TNPSC துளிகள்

- உலக ஆய்வக விலங்குகளுக்கான தினம் ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் 24 ஆம் தேதியன்று கடைபிடிக்கப் படுகிறது (ஏப்ரல் 20 முதல் ஏப்ரல் 26 வரை ஆய்வக விலங்கு வாரம்).
    - இத்தினமானது 1979 ஆம் ஆண்டில் கூறாய்விற்கு எதிரான தேசியக் கழகத்தினால், ஆய்வகங்களில் பயன்படுத்தப்படும் விலங்குகளின் "சர்வதேச நினைவு நாளாக" தொடங்கப் பட்டது.
- ஜெர்மனியிலிருந்து 23 ஆக்சிஜன் உற்பத்தி மையங்கள் மற்றும் கொள்கலன்கள், வான்வழியாக இந்தியாவிற்குக் கொண்டு வரப்பட உள்ளது.
    - தற்போது நிலவி வரும் தட்டுப்பாட்டினைப் போக்க ஜெர்மனியிலிருந்து ஆக்சிஜன் உற்பத்தி மையங்கள் மற்றும் கொள்கலன்களை இந்தியாவிற்கு மருத்துவச் சேவைக்கான ஆயுதப் படை (Armed Forces Medical Service - AFMS) கொண்டு வர முடிவு செய்துள்ளது.
- படைப்பாற்றலை மேம்படுத்துவதையும் சமூகத்திற்குச் சிற்பக்கலை ஆற்றிய பங்கினையும் அதன் தனித்துவத்தைப் புரிந்து கொள்வதையும் நோக்கமாகக் கொண்டுள்ள சர்வதேச சிற்பக்கலை தினமானது உலகம் முழுவதும் கொண்டாடப் படும் ஒரு நிகழ்வாகும்.
    - சர்வதேச சிற்பக்கலை மையத்தினால் ஏற்பாடு செய்யப்படும் இத்தினமானது ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதத்தின் கடைசி சனிக்கிழமையன்று (ஏப்ரல் 24, 2021) அனுசரிக்கப் படுகிறது.
- 2021 ஆம் ஆண்டு வருடாந்திர ஆசிய மாநாட்டிற்கான போவோ மன்றத்தின் தொடக்க விழாவானது தென் சீனாவின் ஹைனான் மாகாணத்திலுள்ள (Hainan Province) போவோவில் (Boao) நடைபெற்றது.
    - இம்மாநாட்டின் கருத்துரு, "மாற்றத்தில் உலகம் : உலகளாவிய ஆட்சிமுறையை வலுப்படுத்தவும், பட்டை மற்றும் சாலை திட்டத்திற்கான ஒத்துழைப்பினை மேம்படுத்தவும் கை கோருங்கள்" என்பதாகும்.
- Accenture இந்தியா என்ற நிறுவனத்தின் தலைவரான ரேகா M. மோகன் மென்பொருள் மற்றும் சேவைகள் நிறுவனங்களுக்கான கூட்டமைப்பின் (National Association of Software and Service Companies – NASSCOM) தலைவராக நியமிக்கப் பட்டுள்ளார்.
    - இந்த மென்பொருள் நிறுவனக் குழுவின் 30 ஆண்டுகால வரலாற்றில் தலைமைப் பொறுப்பை வகிக்கும் முதல் பெண்மணி எனும் பெருமையை இவர் பெற்று உள்ளார்.
- 2021 ஆம் ஆண்டு உலக நோய்த் தடுப்பு வாரமானது (ஏப்ரல் 24 முதல் ஏப்ரல் 30 வரை) எல்லா இடங்களிலும், வாழ்நாள் முழுவதும் அனைவரின் உடல்நலனையும் தடுப்பூசியானது எவ்வாறு மேம்படுத்துகிறது என்பதைக் காட்டுகிறது.
    - இந்த ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, "தடுப்பூசிகள் நம்மை ஒன்றிணைக்கின்றன" (Vaccines bring us closer) என்பதாகும்.

# தேசியச் செய்திகள்

## மின்னணு சொத்து அட்டைகள்

- ❖ சுவாமித்வா திட்டத்தின் கீழ் மின்னணு சொத்து அட்டைகள் (E-Property Cords) வழங்கும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி தொடங்கி வைத்தார்.
- ❖ இந்த அட்டைகள் தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினக் கொண்டாட்டங்களையொட்டி வழங்கப் பட்டன.
- ❖ சுவாமித்வா திட்டமானது 2020 ஆம் ஆண்டில் தேசியப் பஞ்சாயத்து ராஜ் தினத்தன்று தொடங்கப் பட்டது.




- ❖ சுவாமித்வா திட்டம் என்பது கிராமப்புற பகுதிகளில் மேம்பட்ட தொழில் நுட்பங்களைப் பயன்படுத்திக் கிராமங்களைக் கணக்கெடுத்தல் மற்றும் வரைபடமிடுதல், பணிகளை மேற்கொள்ளுதல் ஆகியனவாகும்.
- ❖ இத்திட்டமானது இந்தியாவின் கிராமப்புறப் பகுதிகளில் ஒருங்கிணைந்த சொத்து சரி பார்ப்பிற்கான ஒரு தீர்வினை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளது.
- ❖ இத்திட்டத்தின் கீழ், 2020 மற்றும் 2024 ஆகிய கால கட்டங்களுக்கிடையே வரைபடமிடலானது நிலைவாரியாக (Phase-wise) மேற்கொள்ளப்படும்.
- ❖ இத்திட்டத்தின் கீழ் நிலப்பரப்புகள் ஆளில்லா விமானங்களை (Drones) பயன்படுத்தி வரைபடமிடப் படும்.
- ❖ மேலும் தொடர்ச்சியாக இயங்கும் குறிப்பு வழங்கும் மையங்கள் (Continuously Operating Reference Station – CORS) வரம்புகளை நிர்ணயம் செய்யப் பயன்படுத்தப்படும்.
- ❖ தற்போது இத்திட்டமானது கர்நாடகா, மஹாராஷ்டிரா, மத்தியப் பிரதேசம், உத்தரகாண்ட் மற்றும் உத்தரப் பிரதேசம் ஆகிய மாநிலங்களில் மட்டுமே நடைமுறைப்படுத்தப் பட்டு வருகிறது.

### *இத்திட்டத்தின் குறிக்கோள்கள்*

- ❖ இது கடன் பெறுவதற்கு நிலங்களைச் சொத்துகளாக முன்வைக்கலாம் என்பதால் கிராமப்புற பகுதிகளில் வாழும் மக்களுக்கு நிதிநிலைத் தன்மையை வழங்க இயலும்.
- ❖ இது நிலங்கள் பற்றிய தகவல்களை துல்லியமாக பதிவு செய்ய உதவும்.
- ❖ இது சிறந்த கிராம திட்டமிடலுக்கு உதவும்.
- ❖ கிராமப் பஞ்சாயத்து மேம்பாட்டுத் திட்டங்களுக்கு இத்திட்டம் ஆதரவளிக்கும்.

- கிராமப் பகுதிகளில் சொத்து தொடர்பான தகராறுகளை தீர்க்க இத்திட்டம் உதவும்.

### பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதியில் 27% அதிகரிப்பு

- 2020-21 ஆண்டில் ஏப்ரல் – பிப்ரவரி ஆகிய மாதங்களுக்கு இடைப்பட்ட காலத்தில் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் உற்பத்தி 26.51% என்ற அளவிற்கு உயர்ந்து உள்ளது.
- இக்காலகட்டத்தில் இவற்றின் ஏற்றுமதி ரூ.43,798 கோடி ஆகும்.
- 2020-21 ஆம் ஆண்டில் பதப்படுத்தப்பட்ட காய்கறிகள் மற்றும் மது பானங்களின் ஏற்றுமதி 40% உயர்ந்துள்ளது.
- 2021-22 ஆம் ஆண்டிலும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களின் ஏற்றுமதி உயரும் என வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம் (Agricultural and Processed Food Products Export Development Authority – APEDA) தெரிவித்துள்ளது.
- மத்திய கிழக்கு நாடுகள், அமெரிக்கா, ஐக்கிய ராஜ்ஜியம் ஆகிய நாடுகளில் பதப்படுத்தப்பட்ட பழங்கள் மற்றும் காய்கறிகள், பருப்புகள் போன்றவற்றிற்கான தேவை அதிகரித்திருப்பதே இதற்கான முக்கிய காரணமாகும்.

## சர்வதேசச் செய்திகள்

### இட்ரிஸ் டெபி

- ஆப்பிரிக்காவில் நீண்ட காலம் பணியாற்றிய தலைவர்களுள் ஒருவரான சாட் நாட்டின் அதிபரான இட்ரிஸ் டெபி 2021 ஆம் ஆண்டு ஏப்ரல் 20 அன்று உயிரிழந்தார்.
- அந்த நாட்டின் வடக்குப் பகுதியில் கிளர்ச்சியாளர்களுடனான மோதலில் அவர் காயமடைந்ததையடுத்து அவர் உயிரிழந்தார்.
- அவரின் வயது 68 ஆகும்.
- ஏப்ரல் 11 ஆம் தேதி நடைபெற்ற அதிபர் தேர்தலில் டெபி வெற்றி பெற்றார்.
- இது அவரது ஆறாவது பதவிக் காலமாக இருந்திருக்கும்.
- இட்ரிஸ் டெபி சாட் நாட்டில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக பதவியில் இருந்தார்.

## அறிவியல் மற்றும் தொழில்நுட்பச் செய்திகள்

### வைராஃபின்


- சமீபத்தில் இந்தியத் தலைமை மருந்துக் கட்டுப்பாட்டகமானது (DCGI - Drug Controller General of India) “வைராஃபின்னை” என்ற மருந்தினைப் பயன்படுத்த “கட்டுப்பாடுகளுடன் கூடிய அவசரகாலப் பயன்பாட்டு ஒப்புதலை” வழங்கியுள்ளது.
- வைராஃபின் மருந்தானது ஹெப்படைட்டிஸ் B மற்றும் C போன்ற நோய்களுக்குச் சிகிச்சையளிக்கப் பயன்படுத்தப் படுகிறது.
- தற்போது மிதமான கோவிட்-19 தொற்று ஏற்பட்டவர்களுக்கு சிகிச்சையளிக்க இது பயன்படுத்தப்பட உள்ளது.
- தொற்று ஏற்பட்ட ஆரம்ப நிலையிலேயே வைராஃபின்னின் முதல் தவணையை (Dose) வழங்குவது கோவிட்-19 நோயாளிகள் விரைவில் குணமடைய உதவும்.

- ஆக்சிஜன் வழங்குவதற்கான தேவையை இது குறைக்க உதவும்.
- வைராஃபின் மருந்து கோவிட்-19 நோயில் மிதமான தொற்றுகளிலிருந்து மீளும் காலத்தை மேம்படுத்துகிறது.
- வைராஃபின்னில் சிகிச்சையளிக்கப்படும் 91.15% இளம்பருவ நோயாளிகள் ஏழு நாட்களில் RT-PCR சோதனையில் கோவிட் தொற்றிலிருந்து குணம் அடைந்துள்ளதாக சைடஸ் நிறுவனம் தெரிவித்துள்ளது.
- சைடஸ் நிறுவனமானது சைகோவ்-டி எனப்படும் கோவிட்-19 தடுப்பூசி தயாரிப்பிலும் ஈடுபட்டு வருகிறது.

# முக்கிய தினங்கள்

## உலகக் கால்நடை மருத்துவ தினம் – ஏப்ரல் 24

- இத்தினம் ஏப்ரல் மாதத்தின் நான்காம் சனிக்கிழமையன்று அனுசரிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டில் இத்தினம் ஏப்ரல் 24 ஆம் தேதியன்று அனுசரிக்கப்படுகிறது.
- 2021 ஆம் ஆண்டின் உலகக் கால்நடை மருத்துவ தினத்திற்கான கருத்துரு, "கோவிட்-19 நெருக்கடி காலங்களில் கால்நடை மருத்துவர்களின் பங்களிப்பு" (Veterinarian response to the COVID-19 crisis) என்பதாகும்.
- இத்தினமானது 2000 ஆம் ஆண்டில் உலகக் கால்நடை மருத்துவக் கூட்டமைப்பினால் (WVA – World Veterinory Association) உருவாக்கப்பட்டது.
- விலங்குகள் மற்றும் சமூகத்தின் ஆரோக்கியத்திற்காக கால்நடை மருத்துவர்கள் ஆற்றும் பங்களிப்பினைக் கொண்டாடுவதற்காக இத்தினம் கடைபிடிக்கப்படுகிறது.





## அமைதிக்கான பன்னாட்டு முறைமை மற்றும் அரசியல் செயலாண்மை திறனுக்கான சர்வதேச தினம் – ஏப்ரல் 24

- இத்தினம் ஐக்கிய நாடுகளால் முதன்முறையாக 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 24 அன்று அனுசரிக்கப் பட்டது.
- ஐ.நா.வின் மூன்று தூண்களை மேம்படுத்தவும் அதற்கு ஆதரவளிக்கவும் பன்னாட்டு முறைமை மற்றும் சர்வதேச ஒத்துழைப்பு ஆகியவற்றின் மதிப்புகளைப் பாதுகாப்பது அடிப்படையான ஒன்று என கருதி ஐ.நா. அமைப்பு இத்தினத்தினை அறிவித்தது.
- அமைதி & பாதுகாப்பு, மனித உரிமைகள் மற்றும் வளர்ச்சி ஆகியவை ஐ.நா.வின் மூன்று தூண்களாகும்.
- இது அமைதியான முறையில் நாடுகளுக்கிடையே நிலவும் தகராறுகளை

தீர்ப்பதற்கான ஐ.நாவின் சாசனம் மற்றும் கொள்கைகளை மீண்டும் உறுதி செய்யும் தினமாகும்.

### உலக மலேரியா தினம் – ஏப்ரல் 25

- இக்கொடிய நோயினைக் கட்டுப்படுத்த அவசர நடவடிக்கைகளை மேற்கொள்ளச் செய்வதனை இத்தினம் நோக்கமாகக் கொண்டுள்ளது.
- அனோபிலஸ் பெண் கொசுக்கள் அவற்றின் உமிழ்நீரின் மூலமாக பிளாஸ்மோடியம் ஒட்டுண்ணிகளைப் பரப்பி மலேரியாவை ஏற்படுத்துகின்றன.
- 2021 ஆம் ஆண்டிற்கான இத்தினத்தின் கருத்துரு, “மலேசியா அற்ற நிலை எனும் இலக்கை அடைதல்” (Reaching the zero malaria target) என்பதாகும்.




### சர்வதேச பேராளர்கள் தினம் – ஏப்ரல் 25

- ஐ.நாவின் உறுப்பினர் நாடுகளின் பிரதிநிதிகள் மற்றும் பேராளிகளின் பங்கினை பற்றி விழிப்புணர்வினை ஏற்படுத்த உலகம் முழுவதும் இத்தினம் கடைபிடிக்கப் படுகிறது.
- இத்தினம் சான்பிரான்சிஸ்கோ மாநாட்டின் முதல் நாளினைக் குறிக்கிறது.
- சான் பிரான்சிஸ்கோ மாநாடு என்பது சர்வதேச அமைப்பு மீதான ஐக்கிய நாடுகள் மாநாடு எனவும் அழைக்கப்படுகிறது.
- இந்த ஆண்டு சான்பிரான்சிஸ்கோ மாநாட்டின் 75வது நிறைவு ஆண்டாகும்.
- 2019 ஆம் ஆண்டு ஏப்ரல் 02, அன்று ஐக்கிய நாடுகள் பொதுச் சபையானது ஏப்ரல் 25 ஆம் தேதியினை சர்வதேச பேராளர்கள் தினமாக அறிவித்தது.

## இதரச் செய்திகள்

### சம்பந்த் ஃபின்செர்வ்வின் உரிமம்

- மோசடியின் காரணமாக பாதிக்கப்பட்ட சம்பந்த் ஃபின்செர்வ் பிரைவேட் லிமிடெட்டின் உரிமத்தினை ரத்து செய்யும் முன்னர் இந்திய ரிசர்வ் வங்கியானது

காரணம் கேட்புக் குறிப்பாணையினை (Show Cause Notice) அளித்துள்ளது.

- சமீபத்திய மாதங்களில் அந்நிறுவனத்தின் நிகர மதிப்பு குறைந்தபட்ச ஒழுங்குமுறைக்கு கீழே சென்றதாலும் அதன் நிதிநிலை மீட்சிநிலையை விட மோசமடைந்ததாலும் இந்த ஆணை வழங்கப்பட்டுள்ளது.
- சம்பந்த் நிறுவனம் ஒரு வங்கியல்லாத நிதி நிறுவனம் மற்றும் சிறு நிதி நிறுவனமாக (NBFC – MFI) பதிவு செய்யப்பட்டுள்ளது.
- ரிசர்வ் வங்கியின் நெறிமுறைகளின்படி, வங்கியல்லாத நிதி நிறுவனங்கள் அவற்றின் ஒட்டு மொத்த ஆபத்து நிறைந்த சொத்துக்களில் 15% என்ற அளவிற்கு குறையாது நிலை – I மற்றும் நிலை – II என்ற மூலதனங்களைக் கொண்ட குறைந்தபட்ச மூலதன நிலையைக் கடைபிடிக்க வேண்டும்.
- சம்பந்த் ஃபின்செர்வ் பிரைவேட் லிமிடெட் 1992 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது.
- இதன் தலைமையகம் ஒடிசாவில் உள்ளது.

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★